வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தனிப்பாடல்களில் தலங்களும் விழாக்களும்

**மு. பிரபாகரன்**
முனைவர்பட்ட ஆய்வாளர்( (முழுநேரம்), தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-2
( திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

**ஆய்வுச் சுருக்கம்:**

நம் தமிழ்ச் சமூகம் நீண்ட நெடிய பாரம்பரியத்தை உடையது. லெமூரிய கண்டம் தொடங்கி அதன் வளர்ச்சி இன்று வரை தொடர்ந்து கொண்டே உள்ளது. காலத்திற்கேற்பஇலக்கியங்கள் வளர்ச்சி அடைந்தன. குறிப்பாக சங்க காலங்களில் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும், களப்பிரர் ஆட்சிக்காலத்தில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்களும் வளர்ச்சி பெற்றது. மேற்கண்டஇலக்கியங்கள் போல் அல்லாமல்தனிப்பாடல்களின் கால எல்லையானது மிக நீண்டது. பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சூழல்களில் வாழ்ந்த புலவர்கள் எழுதிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு ஆகும்.அப்பாடல்களின் வழியாகத் திருத்தலப் பெருமையையும் விழாக்களையும் அறிவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**கலைச்சொற்கள்:**

நடுகல், பீலி, நெடுவேள், மாயோன், அவிர்சடை

**முன்னுரை:**

மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது மொழி. ஒவ்வொரு சமூகமும் தனக்கென ஒருமொழியைக் கொண்டுள்ளது. மொழியின் வழியாக வளர்வதே இலக்கியமாகும். தமிழ் மொழியிலும் ஏராளமான இலக்கிய நூல்கள் உள்ளன.

அவற்றில் தனிச்சிறப்புடன் விளங்கும் தனிப்பாடல்கள் நம் சமூகத்தை வெளிப்படுத்தும் ஆகச் சிறந்த கண்ணாடியாக விளங்குகின்றன. அத்தனிப்பாடல்களில்காணலாகும்திருத்தலப் பெருமைகளையும் விழாக்களையும் பற்றி விரிவாகக்காண்போம்.

**தனிப்பாடல்கள் தொகுப்பு:**

தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ள புலவர்களின் காலம் 10ஆம் நூற்றாண்டுமுதல் 19ஆம் நூற்றாண்டு வரை எனினும் சில ஆய்வாளர்கள் 12ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு எனவும் கூறுகின்றனர். அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த புலவர்களின் உள்ளப் போக்குகளையும், அவர்கள் எதிர்கொண்ட வசை, அவலம், பெருமிதம் முதலியவற்றையும்தங்கள்பாடல்கள் வாயிலாக வெளிப்படுத்தினர். பாடல்களைத் தொகுத்தவர்கள் தங்களுக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டு பிறவற்றை விட்டுவிட்டனர். அவ்வாறு விடுபட்ட பாடல்களைப் பின்னர் வந்த சில அறிஞர்கள் தொகுத்து வெளியிட்டனர். அப்பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு ஆகும். இதனைத் தனிப்பாசுரத்தொகை என்றும் அழைப்பர்.

**இலக்கணம்:**

“தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவர் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருள் இடம் காலம் தொழில் என நான்கினும்
பாட்டினும் அளவினும் கூட்டிய வாகும்” - தண்டியலங்காரம் (நூற்பா எண்- 5)

தொகைநிலைச் செய்யுள் ஒருவர் எழுதியதாகவோ அல்லது பலர் எழுதியதாகவோ இருக்கலாம். அதனைப் பொருள், இடம், காலம், தொழில் என்னும் நான்கினும் பாட்டு அளவு அடிப்படையிலும் தொகுக்கலாம் எனத் தண்டியலங்காரம் தொகை நூலுக்கு இலக்கணம் பகர்கின்றது.

உலக இலக்கியங்களின் வரிசையில் தனக்கென ஒரு தனித் தன்மையை உடைய தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து நோக்கும் போது தனிப்பாடல்கள் தான் முதலில் தோன்றியிருக்க வேண்டும். அதன் தொடர்ச்சியாகத் தான் தொடர்நிலை செய்யுள்கள் வளர்ந்திருக்க வேண்டும். நம் இலக்கியங்களின் தொடக்கமான எட்டுத்தொகை

நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு முதலிய நூல்கள் அனைத்துமே தொகை நூல்கள் தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**தமிழகத்தில் சமயம்:**

சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை தமிழகத்தை ஆண்ட அரசுகளுக்கு ஏற்ப பல சமயங்கள் மக்களிடையே ஆட்சி செலுத்தியுள்ளன. பண்டைய காலத்தில் 'நடுகல்' வழிபாடே முதலில் தோன்றி இருக்க வேண்டும்என்றும் அதனைத் தொடர்ந்து தான் பல சமயங்கள் வளர்ச்சியடைந்துள்ளன என்றும் வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன.

“பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்

வேலூன்று பலகை வேற்றுமுளை கடுக்கும்”- (அகம்-131)

என்ற அகநானூற்றுப் பாடல் வாயிலாக நடுகல் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. போரில் வீரமரணம் அடைந்த மறவருக்கு நடுகல் எழுப்பி அதில் அவருடைய பெருமைகளை எழுதிவைப்பர். நடுகல்லுக்கு மாலை சூட்டி வழிபடுவர். நடுகல்லைத் தொடர்ந்து தமிழர்கள் வணங்கிய தெய்வங்களில் முதன்மையான தெய்வம்முருகன்.

“வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்

நெடுவேள்” (புறம்-55)

முருகனைப் பற்றி புறநானூறு என்று கூறுகின்றது. பௌத்தமும்சமணமும் களப்பிரர் காலத்தில் தமிழகத்துக்கு வந்தது. அவர்களுடைய ஆட்சி முடியும் போது இச்சமயங்களும் தனது செல்வாக்கை இழந்தது. சிவனைப் பற்றி தொல்காப்பியம் எதுவும் குறிப்பிடவில்லை. அதே போல் சங்க இலக்கியங்களிலும் சிவன் என்ற வார்த்தை பயின்று வரவில்லை. ஆனால் அவருடைய குணங்களைப் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

“ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை

மாற்றரும் கணிச்சி மணி மிடற்றோறும்” ( புறம் -56)

என சிவபெருமானின் இயல்புகளைப் புறநானூறு குறிப்பிடுகின்றது. அதே போல் வைணவத்தின் முழுமுதற் கடவுளான திருமால் பற்றி தொல்காப்பியம் கூறுகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகம் "(தொல். அகத்.நூற்பா எண்- 5)

இங்கு மாயோன் என்பது ஆயர்கள் வணங்கும் முல்லை நிலக் கடவுளான விஷ்ணுவைக் குறிக்கின்றது எனப் பலர் குறிப்பிடுகின்றனர். மேலும் அயல்நாட்டார் வருகையினால் கிறித்தவம், இஸ்லாம் முதலிய சமயங்களும் தமிழகத்தில் பரவின.

தனிப்பாடல்களில் காணலாகும் திருத்தலப் பெருமைகள்:

தனிப்பாடல் திரட்டு என்னும் நூல் தமிழ் இலக்கியத்தின் ஒட்டுமொத்த கலவையாகும். இந்நூலில் அனைத்தும் உள்ளன. புலவர்கள் சில தலங்களுக்குச் சென்று வழிபட்டதை பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

காளமேகப் புலவர் சிதம்பரத்தைப் பற்றி கீழ்க்கண்டவாறு பாடியுள்ளார்.

"ஞான சபைக னகசபைசிற் றம்பலம்பே

ரானநதக் கூடந்திருமூலட் - டானம்பே

ரம்பலம்பஞ் சாவரண நாற்கோபு ரம்பொற்செய்

கம்பமண்ட பஞ்சிவகங்கை" – (பாடல் எண்– 44)

சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய திருத்தலத்தில் உள்ள சின்னங்கள் ஒவ்வொன்றையும் சிறப்பாக காளமேகப் புலவர் பாடியுள்ளார். அவரே திருவாரூர் சென்று அங்குள்ள இறைவனை வழிபட்டார்.

"சங்கு தீர்த் தந்திருந் சாளரவா யில்வீர

சிங்காசனந்திருவந் திக்காப்புப் - பங்குனிமா

தத்திருநா ளர்த்தந் திருவினா தன்கோயில்

உத்தரபா கந்திருவா ரூர்" - (பாடல் எண்– 45)

திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராஜப் பெருமானுடையகோவில் சின்னங்களை இப்பாடலில் கூறியுள்ளார். சங்குதீர்த்தம், திருச்சாளர வாயில், வீரசிங்காசனம், திருவந்திக் காப்பு முதலிய சின்னங்களைச் சிறப்பாகப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

“திருக்குடந்தை தையா திரும்பேசர் சொந்தா

மரைக்குளங் கங்கை மகங்கா - விரிக்கரையின்

ஓரங்கீழ்க் கோட்டங்கா ரோணமங்கை நாயகியார்

சாரங்க பாணி தலம்” - (பாடல் எண்– 48)

கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் சாரங்கபாணி என்னும் பெருமாள் திருக்கோவில் பற்றி காளமேகப் புலவர் பாடியுள்ளளார். அக்கோயிலின் சின்னங்களான செந்தாமரைக் குளம், கங்கை மரம், கீழ்க்கோட்டம், காரோணம் முதலிய சின்னங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

“வியந்தநி சாசர னாமென்று சந்த்ரனும் வெஞ்சனிக்குப்

பயந்தவ னாமென்று பானுவும் வந்து பணியச் செம்பொன்

நயத்தரு செல்வக் கழுகா சலமது நன்புவைத்துச்

செயந்தந்த தான்மதி யாதவ ரென்னத் திரிந்தனரே” -(பாடல் எண்– 8)

திருக்கழுக்குன்றத்தைப் பற்றி நமச்சிவாயம் புலவர் பாடிய பாடலாகும். இதில் அந்தக் கோவிலின் அமைப்புகளையும் சந்திரன், சனி முதலிய கோள்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

“கோபுரங்கள் நான்கினையுங் கண்டமட்டிற் குற்றமெலாந்

தீபரந்த பஞ்சதுபோற் சென்றதே - நூபுரங்கள்

ஆர்க்கின்ற செஞ்சரண வம்பலவா நின்பாதம்

பார்க்கின்றார்க் கென்னோ பலன்” - (பாடல் எண்– 6)

சிதம்பரத்தைப் பற்றி குருநமச்சிவாய தேவர் பாடிய பாடல் நான்கு கோபுரங்களைக் கண்ட உடனே நம்முடைய குற்றம் எல்லாம் பஞ்சுபோல் கருகிவிடும் உன் பாதம் பணிபவருக்குப் பலன் உண்டு எனப் பாடியுள்ளளார்.

"வல்லவகு ளத்திருக்கு மன்னவா வாசமலி

நல்லவகு ளத்திருக்கு நாதனே - மெல்ல

வடிவாளைப் கொண்மண வாளா கணிச்சி

வடிவாளைக் கொண்டென்னிர் மாற்று" - (பாடல் எண்– 1)

தொட்டிக்கலை சுப்பிரமணியத் தம்பிரான் திருவொற்றியூர்ப் பெருமானைப் பாடியது. எல்லாத் திறமையும் உடையவனே நெற்றியில் கண்ணுடைய வேந்தனே! மணம் நிறைந்த செழிப்பான மகிழ மரத்தினடியின் கீழ்த் தங்கியபெருமான் என சிவபெருமானைத் துதித்துப் பாடல் பாடியுள்ளார்.

**தனிப்பாடல்களில் காணலாகும் விழாக்கள்:**

சங்க காலம் தொட்டே தமிழர்களின் வாழ்க்கையோடு திருவிழாக்களும் கலந்தே இருந்துள்ளது. கோயில்களில் விழா எடுத்தல் மன்னனின் பிறந்த நாள் முடிசூட்டு விழாக்களும் மிகவும் சிறப்பாக நடந்தேறியுள்ளது. திருவிழாக்களின் போது பாணர்கள், விறலியர்கள், கூத்தர்கள் முதலியோரின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மக்கள் விழாக்களின்போது வீடுகளைச் சுத்தம் செய்துதோரணங்களைக் கட்டி அழகுபடுத்தினர். தனிப்பாடல்களிலும் சிலபாடல்கள் கோவில் விழாக்களைப் பற்றி கூறுகின்றன.

"வந்து மழைபொழியும் வானேவெஞ் சூர்தடிந்த

கந்தமர் திருவிழாக் காலத்தில் - தொந்தரையா

நீர்த்துளியை யூற்றிவிட னேர்த்தியல மாற்றிவிடு

கீர்த்திவரு நாட்டென்மொ(ழி) கேள்" - (பாடல் எண்– 11)

திருச்செந்தூரில் திருவிழாக் காலத்தின்போது மழையை நிறுத்தப்பாடல்பாடப்பட்டுள்ளது இப்பாடல். கார் காலத்தில் மழை பெய்கின்ற மேகமே நீ கொடிய சூரனைக் கொன்ற முருகப் பெருமானது கந்தர்சஷ்டித் திருவிழாக் காலத்தில் இடையூறாகப்பெய்கிறாய்இதுஉனக்கு அழகல்ல. எனவே நான் சொல்லும் மொழியைக் கேட்பாயாகஎன்று பாடியுள்ளார். இப்பாடல் வழியாக முருகனுக்கு கந்தர்சஷ்டித் திருவிழா நடைபெற்றதை அறியமுடிகின்றது.

“குருத்துவாழைகள் வேள்குடைக்கொரு கோறருந்திரு மங்கலம்

குடிவிளங்கிய வாவிநாயகர் கோபுரந்திரு மண்டபம்

நிருத்தமாதரோ டாடல்பாடல்கள் கண்டமாமுகில் பாலைவாய்

கண்டன் வரைக்குளே யெதிர்நிற்குமாதர் முகத்திலே”- பாடல் எண்– 139)

இப்பாடல் விழாக்காலங்களில் ஆடல் பாடல்கள் நடைபெற்றன என்பதையும் அதற்கென்று தனி அரங்கம் இருந்தது என்பதையும்உறுதி செய்கின்றது. இளம் வாழைத் தண்டுகள் மன்மதனுடைய குடைக் காம்புக்குத் தடியாகப் பயன்படுவதுபோலவிளங்கும். திருமங்கலத்திலுள்ள குடிகள் தழைக்கும்படியாக விளங்கும் உயிர் போன்ற கடவுளுக்குக் கோபுரமும் திருமண்டபமும் அமைத்துப் பெண்களுடைய ஆடல் பாடல்களோடு கூடிய திருவிழா நடைபெற்றது.

“செந்தமிழால் யானுரைக்குந் தேனருந்த நின்செவிக்குச்

செந்தமிழை யாவதிலுக் சொத்துக்கு - வந்த செல

வேது கலபமாயி லேறுமுரு காவிதனை

ஓது விரைவாக உவந்து” - (பாடல் எண்– 12)

முருகனின் கந்தசஷ்ட்டி கவசத்தை முத்துராமலிங்க சேதுபதி பாடியுள்ளார். இப்பாடலில் முருகனை புகழ்ந்து செந்தமிழில் நான் பாட அதை நீ செவி வழியே உண்டு மகிழ வேண்டும் என்று பாடியுள்ளளார்.தனிப்பாடல் திரட்டில் தெய்வங்களைச் சார்ந்த பாடல்கள் மட்டும் 400க்கும் மேற்பட்டவை காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை சைவம் வைணவம் சார்ந்தவையே ஆகும்.

**முடிவுரை:**

இவ்வாறாகத் தனிப்பாடல் திரட்டில் சைவ வைணவ தலங்களின் தலப்பெருமையையும் விழாக்களையும் பார்த்தோம். விழாக்களில் முருகப்பெருமானைப் பற்றித்தான் காணப்படுகிறது.சங்க காலத்திலேயும் 'வேலன் வெறியாட்டு' என்ற நிகழ்வை நாம் கேள்விபட்டிருப்போம். முருகனுக்கு விழா எடுத்ததை இவை உறுதி செய்கின்றது.

**முதன்மை ஆதாரம்:**

1. சுப்பிரமணியப் பிள்ளை.கா - தனிப்பாடல் திரட்டு 1, 2

மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை - 600 014

**துணை நின்ற நூல்கள்:**

1. சுப்பிரமணியம்.இராம - தண்டியலங்காரம், முல்லை நிலையம்,9, பாரதி நகர் - முதல் தெரு தியாகராய நகர் சென்னை - 600 017

2.இளம்பு}ரணர் (உரை)- தொல்காப்பியம் பொருளதிகாரம்,சாரதா பதிப்பகம், 6/16, தோப்பு வேங்கடாசலம் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005

3. சுப்பிரமணியன் ச.வே (உரை) – அகநானூறு, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை - 600 108

4.சுப்பிரமணியன் ச.வே (உரை) - புறநானூறு, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை - 600 108